**உடுதும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 28 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் உடுதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 02 நீர் உத்தேச திட்டங்களில் பெறுமதியான ரூபா 2,512,045 இனை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (ii) | பிரதேச சபைக்கு சொந்தமான காணிகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (iii) | அன்பளிப்பாக கிடைத்திருந்த நீர் பவுஸரின் பெருமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நீர் பவுஸரின் பெருமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (iv) | ரூபா 257,600 பெறுமதியான 7 அலுவலக உபகரண விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |
| (v) | பண்டக ஏலவிற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 53,002 ஆன வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை | வருமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்கிறேன். |

(ஆ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று விஞ்சியிருந்த பெற வேண்டிய மீதி ரூபா 465,684 ஆனது. | பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கடன் பட்டோர் மீதி தொடர்பாக பதிலைஹஹ 2019 மே 31 திகதிக்கு முன் வழங்குகிறேன். |
| (ii) | 05 ஆண்டுகளை விஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,624,827 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கடன் பட்டோர் மீதி தொடர்பாக பதிலை 2019 மே 31 திகதிக்கு முன் வழங்குகிறேன். |

(இ) **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 134,897,875 பெறுமதியான காணிகளிற்குரிய உறித்துரிமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | சபைக்கு சொந்தமாக இருப்பது 15 உறுதிகளே ஆகும். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 371(2)(ஆ) | ரூபா 166,784 ஆன முற்பண மீதியை தீர்திக் கொண்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2 பாடநெறிகளுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை சான்றிதழ்கள் சமர்ப்பித்ததன் பின் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2013 ஜுலை 31 திகதிய இலக்கம் 07 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் முச்சக்கர வண்டி ஒழுங்கமைப்பு தொடர்பாக ஆலோசணை வழங்கியுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை ல. | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைத்து கட்டணம் அறவிட வேண்டும். | முச்சக்கர வண்டிகளை பதிவு செய்து அனுமதிப்பத்திரம் விநியோகித்து முறையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.5 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தவிசாளரிற்க மற்றும் உப தவிசாளரிற்கு ரூபா 65,000 செலவிடப்பட்டு 02 கையடக்க தொலைபேசிகள் வழங்கப்பட்டிருந்தன. | சட்டம் விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்திற்கு 1993 இன் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் பிரகாரம் இந்த வசதியை வழங்கப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,864,707 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,783,732 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 1,322,000 | 650,604 | 1,518,749 | 466,760 | 1,196,000 | 1,277,747 | 1,023,324 | 254,423 |
| (ii) | வாடகை | 2,115,000 | 2,981,952 | 1,963,040 | 125,000 | 1,830,000 | 1,979,240 | 1,746,560 | 232,680 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 890,000 | 1,149,950 | 1,166,200 | 411,900 | 1,290,000 | 1,131,590 | 833,140 | 298,450 |
| (iv) | ஏனைய வருமானம் | 36,582,279 | 2,013,807 | 2,286,897 | 141,030 | 4,979,000 | 8,964,052 | 7,124,889 | 1,839,163 |
| | | 40,909,279 | 6,796,313 | 6,934,886 | 1,144,690 | 9,295,000 | 13,352,629 | 10,727,913 | 2,624,716 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சேகரிக்க வேண்டிய மொத்த வருமானம் ரூபா 9,421,029 ஆன போதும், ஆண்டினுள் சேகரித்த வருமானம் ரூபா 6,934,886 ஆனதில் வருமான சேகரிப்பின் சதவீதம் 74 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 543,717 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,129,644 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 02 விடயங்களுக்காக மாத்தரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | துணைச் சட்டம் விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) **எதிர்பார்த்த நலன்கள் (out come) பெற்றுக் கொள்ளாமை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | புரநெகும கருத்திட்டத்திலிருந்து ரூபா 42,160,398 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹுன்னஸ்கிரிய பலநோக்கு கட்டிடத்தில் 4870 வருக்க அடி அளவு விளைவற்று நிலவியது. | சொத்துக்களிலிருந்து எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான ஈட்டுதளுக்கு நடவடிக்கை எடுத்த போதும் அது தோல்வியுற்றது. மீண்டும் டென்டர் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | திஸ்ஸ அத்தநாயக கேட்போர்கூடம் ரூபா 4,758,528 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதும் 2018 ஆண்டில் ரூபா 5,000 மாத்திரமே ஈட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களிலிருந்து எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கட்டணம் அறவிட வர்த்தமானி மூலம் பிரபல்லியப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கொவுலேகம கொம்போஸ்ட் கொட்டிலொன்றை நிருவி கொம்போஸ்ட் அகழி மற்றும் களஞ்சியத்திற்காக 2010 ஆண்டில் ரூபா 3,487,828 தொகையும், இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்கு 2012-2017 ஆண்டுகளில் ரூபா 5,069,140 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் கருத்திட்டம் தோல்வி நிலையில் இருந்தது. | முறையாக உக்கலடையும் உக்கலடையா மற்றும் கழிவு பொருள் முகாமைத்துவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 நடைமுறை திட்டத்தை தயாரிக்கும் போது அளவுகோள்களை இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 29 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | சபை நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு செந்தமான 3 நீர் கருத்திட்டங்களின் 304 வாடிக்கையாளர்களுக்கு நீர் மாணிகள் பொருத்தாது வியாபார நிறுவனங்களிலிருந்து ரூபா 200 உம் வீட்டு பாவனையாளர்களிடமிருந்து ரூபா 150 ஆன நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் மாணிகளை பொருத்திய போதும் சுத்திகரிப்பு முறையொன்றை பயன்படுத்தாததால் நீர் மாணிகள் செயலிழந்துள்ளன. |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 சொத்துக்களின் பெற வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 21,943,890 பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை | இவ் இயந்திர உபகரணங்களை பயன்படுத்த | சாரதிகள் இல்லாமை மற்றும் கேள்வி இல்லாமை காரணமாகும். |

| | |
|---|---|
| பயன்படுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 04 வாகனங்கள் விளைவற்று சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தன. | பயன்படுத்த முடியாத சொத்துக்களை பராதீனம் செய்ய வேண்டும். | விளைவற்ற சொத்துக்களை ஏலவிற்பனை செய்கிறேன். |